**மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி**

**அசல் வழக்கு எண். 24 /2023 வா.சா.1**

2026–ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09–ம் நாள் திங்கள்கிழமை–ன் வாக்குமூலம் 1857 ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: ஆறுமுகம் | தந்தை பெயர்: அழகு |
| ஊர்: | தாலுகா: |
| வயது: | தொழில்: |
| ஜாதி: | சமயம்: |

---

**09.02.2026:**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நான் சென்னையில் குடியிருந்து வருகிறேன் . வழக்கு சொத்துக்களை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பழனியப்பன், மலைச்சாமி ஆகியோர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் . தாவாச் சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் ஞாபகமில்லை . தாவாச் சொத்து எனது பூர்வீகச் சொத்து என்று நிருபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள வற்றை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் உடன்பிறந்தவர்கள் என்னுடன் சேர்த்து 4 நபர்கள் ஆகும். 3 நபர்கள் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்தோம்.

2. 1ம் பிரதிவாதி பழனி இறந்துவிட்டார் . அந்த விவரத்தை நீதிமன்றத்தில் தெரிவித்துவிக்கவில்லை. 2ம் பிரதிவாதி மலைச்சாமி எனது அண்ணணிடமிருந்து 2014–2017 ம் வருடத்தில் கிரையம் பெற்றார். அந்த கிரைய ஆவண எண் தற்போது எனக்கு ஞாபகமில்லை . 3ம் பிரதிவாதி வசந்திக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கோராமல் , அவரை தொந்தரவு செய்யவேண்டி இவ்வழக்கில் சேர்ந்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. 1ம் பிரதிவாதியிடம் 2014ம் வருடம் 2ம் பிரதிவாதி மலைச்சாமி கிரையம் பெற்றுள்ள நிலையில் 2022ம் வருடத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் சென்னையில் இருந்ததாலும், 2022ம் வருடம் நான் விவசாயம் செய்த போது பிரதிவாதிகள் தடுத்ததால் தாக்கல் செய்துள்ளேன். நான் பிரதிவாதிகளுக்கு 2020ம் வருடம் அனுப்பிய அறிவிப்பை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

4. 1998ல் காயம்பட்டியை சேர்ந்த பாலகிருஷ்ணனுக்கு, 1ம் பிரதிவாதி கிரையம் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது . 2,3 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற விவரம் வில்லங்கசான்று போட்டு தெரிந்துகொண்டேன் . வில்லங்கத்தில் 1998 கிரையம் பதிவு இல்லை . மேற்படி வில்லங்கத்தில் 1998 கிரையம் பதிவு இருக்கும் என்றாலும் , அதனை வழக்கிற்காக மறைக்கிறேன் என்றால் சரியல்ல.

5. எனது பிராதில் 4 பேர் வாரிசுகள் என்றும் , அதனை என் அண்ணன் பிரித்து தர முன் வரவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . இது சம்மந்தமாக பாக வழக்கு நான் தாக்கல் செய்யவில்லை. நான் 13 ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் . மேற்படி

ஆவணங்கள் அனைத்தும் பிரதிவாதி பெயரிலுள்ள ஆவணங்கள் என்றால் சரிதான் . அது எனது தாத்தாச் சொத்தாகும்.

6. 8 வது ஆவணம் மாவட்ட பதிவாளருக்கு, பிரதிவாதிகளுக்கு எதிராக மனு செய்த மனு நகலாகும். அந்த உத்தரவு ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை . எனது வழக்குமூலம் , வியாட்ஜிய மூலம் தவறு என்றாலும் சரியல்ல . பூர்வீக சொத்து என்பதை காண்பிப்பதற்கு நான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . ¼ பாகத்திற்கு பாக பிரிவினை வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதியை தேவையில்லாமல் சேர்த்துள்ளதால் அனாவசிய தரப்பினரை சேர்த்த தோஷத்திற்கு எனது வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . அனுபவத்தில் இல்லாமல் நான் கோரிய நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல. தாவாச் சொத்தில் கடைக்கள் கட்டி வாடகைக்கு விட பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு 2, 3 பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>வாதி தரப்பு மறு விசாரணை:</u>

7. தாவாச் சொத்து எனது தாத்தா பழனிக்கு ஆதியில் பாத்தியமாகும். எனது தாத்தா பழனியின் அப்பா பெயர் அழகன் ஆகும் . எனது தாத்தா 1959 ம் வருடம் கிரையம் பெற்றார் . எனது தாத்தா கிரையம் பெற்ற ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் . 1 ம் பிரதிவாதி பழனி மேற்படி கிரையத்தின் போது பிறக்கவில்லை. எனது அப்பா பெயர் அழகன் ஆகும். எனது தம்பி 1 ம் பிரதிவாதி பெயர் பழனி, தந்தை பெயர் அழகன் ஆகும் . எனது தாத்தா பெயர் பழனி , தந்தை பெயர் அழகன் ஆகும். தாவாச் சொத்து எனது தாத்தா பழனியின் சொத்து என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அது வா.சா.ஆ –1 ஆகும்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

8. எனது தாத்தா பெயர் பழனி ஆகும். எனது தாத்தாவிற்கு 5 வாரிசுகள். எனது தாத்தாவிற்கு 5 வாரிசுகள் உள்ள நிலையில் எனக்கு ¼ பங்கு பாகம் சித்தித்துள்ளது என்று வழக்கு தொடுத்துள்ளதால் வழக்கு பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல . மோசடியாக பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி கிரையம் ஏற்படுத்தியதற்கு எதிராக நான் புகார் கொடுத்துள்ளேன் . மேற்படி புகார் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.